*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
***தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்***
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
*பகுதி V, பதிப்பு 13 - ஏப்ரல் 2018*
*UGC Approved Journal (64089), © Author*

# சங்ககாலப் போர்வீரர்களின் செயல்பாடுகள்

**முனைவர் வி.அன்னபாக்கியம்**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
தி ஸ்டாண்டர்டு ∴பயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி

## முன்னுரை

*வீரர்களின் புறவாழ்க்கையில் மிக இன்றியமையாதப் பணி போர் புரிவதாகும். வீரர்கள் போர்த் தொழிலில் விருப்பத்தோடு ஈடுபட்டுள்ளனர். தம் உயிரின் மீது சிறிதும் பற்று இல்லாதவர்களாய் செயல்பட்டுள்ளனர். போர்ப்பறை கேட்டவுடன் வீறுகொண்டு எழும் வீரர்கள் போர்க்களத்தில் எவ்வாறு செயல்பட்டனர் என்பதைத் தொல்காப்பியப் புறத்திணையியல் மற்றும் புறநானூற்றுப் பாடல்கள் சிறப்பான முறையில் எடுத்துரைத்துள்ளன.*

**வீரர்களின் செயல்பாடுகள்**

வீரர்களின் புறவாழ்க்கையில் மிக இன்றியமையாதப் பணி போர் புரிவதாகும். வீரர்கள் போர்த் தொழிலில் விருப்பத்தோடு ஈடுபட்டுள்ளனர். தம் உயிரின் மீது சிறிதும் பற்று இல்லாதவர்களாய் செயல்பட்டுள்ளனர். போர்ப்பறை கேட்டவுடன் வீறுகொண்டு எழும் வீரர்கள் போர்க்களத்தில் எவ்வாறு செயல்பட்டனர் என்பதைத் தொல்காப்பியப் புறத்திணையியல் மற்றும் புறநானூற்றுப் பாடல்கள் சிறப்பான முறையில் எடுத்துரைத்துள்ளன.

**ஆநிரை கவர்வதில் வீரர்கள்**

போரின் தொடக்கமாக ஆநிரைகளைக் கவர்வது வழக்கம். மன்னன் ஏவும் பொழுது பகைநாட்டில் சென்று ஆநிரைகளைக் கவர்வதற்குப் புறப்படும் வீரர்கள், நற்சொல் மற்றும் விரிச்சி கேட்டு, ஒற்று ஆராய்ந்து செல்வர். பின்பு பகைவர் ஆக்களைக் கவர்ந்து வரும் போது துன்பமில்லாமல் தம் நாட்டிற்குக் கவர்ந்து வருவர். இதனை,

*"ஒற்றின் ஆகிய வேயே வேயப்புறம்*
*முற்றின் ஆகிய புறத்திறை முற்றிய*
*ஊர்க்கொலை ஆகோள் பூசன் மாற்றே*
*நோயின்று உய்த்தல் "*
*(தொல்.புறத்.1004:3-6)*

என ஆநிரைகளைக் கவர்வதை விட கவர்ந்த ஆநிரைகளுக்குத் தீங்கு நேராதவாறு காப்பது வீரர்களின் கடமையாகும் என்பதைத் தொல்காப்பியர் சுட்டியுள்ளார்.

புறநானூற்றில் ஆநிரை கவரச் சென்ற வீரர்கள் பகைவரின் ஆநிரைகளைத் தன் கை வில்லால் கைப்பற்றியதை,

*"புல்லார் இனநிரை செல்புறம் நோக்கிக்*
*கையின் சுட்டிப் பையென எண்ணிச்*
*சிலையின் மாற்றி யோனே"*
*(புறம்.257:8-10)*

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

ஆநிரைகளைக் கவர்ந்து வந்த வீரனொருவன் வேல் தைத்து நிற்கும் மார்பினை,

*"நெடுவேல் பாய்ந்த மார்பின்*
*மடல்வன் போந்தையின் நிற்குமோர்க்கே"*
*(புறம்.297:9-10)*

என மடல் நிறைந்த பனைமரத்தோடு ஒப்பிட்டுள்ளமையைப் புறநானூறு புகல்கின்றது.

இவ்வாறாக ஆநிரை கவரும் வீரர்கள் பகைவரின் ஆநிரைகள் செல்லும் இடங்களை ஆராய்ந்து தம் வில்லாற்றலால் அவற்றைத் கவர்ந்து வந்துள்ளனர். ஆநிரைகளைக் கவர்வதற்காகப் பகைவரின்

வேல்படையைத் தன் மார்பிலே தாங்கியுள்ளனர்.

**ஆநிரை மீட்பதில் வீரர்கள்**

வெட்சியார் கவர்ந்து சென்ற ஆநிரைகளை மீட்கும் பொருட்டு அவர்களோடு போரிட்டு விரட்டுவது, வெட்சியார் கவர்ந்த,'ஆநிரைகளை மீட்காவிடில் யான் உயிர் விடுவேன்' என்பது போலச் சூளுரைத்துப் போர்க்குச் சென்று ஆக்களை மீட்பது கரந்தைத்திணை வீரர்களின் செயலாகும். இதனை,

*"ஆரமர் ஓட்டலும் ஆபெயர்த்துத் தருதலும்*
*சீர்சால் வேந்தன் சிறப்பெடுத்து உரைத்தலும்*
*தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்"*
*(தொல்.புறத்.1006:11-13)*

என்ற நூற்பாவால் அறியலாம். மேலும் ஆநிரைகளை மீட்கும் வீரர்கள் போரில் மாய்ந்து போதலும் கூடும்.

*"வருதார் தாங்கல் வாள்வாய்த்துக் கவிழ்தல் என்று*
*இருவகைப்பட்ட பிள்ளை நிலையும்"*
*(தொல்.புறத்.1006:15-16)*

என்ற நூற்பா போரில் முன்னே வரும் தூசிப் படையை வீரன் ஒருவன் மட்டும் நின்று தடுத்தல், தன் கைவாளால் பிறரை வெட்டி வீழ்த்தித் தானும் மாய்ந்து போகக் கூடிய நிலை ஆகிய போர்க்களச் செயல்பாடுகளைக் காட்டுகின்றன.

ஆநிரைகளை மீட்கச் சென்ற வீரனொருவன் வெள்ளத்தை அடைக்கும் அணைப் போல நின்று பகைப்படையைத் தடுத்து நிறுத்தியதை,

*"வில்உமிழ் கடுங்கணை மூழ்கக்*
*கொல்புனல் சிறையின் விலங்கியோன்"* *(புறம்.263:7-8)*

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

அச்சம் தரும் போர்க்களத்தில் வீரனொருவன் கோடரி பிளந்த மரத்தைப் போல வாளானது தன் மார்பைப் பிளக்கப் போரிட்டு மாய்ந்ததை,

*"விழுநவி பாய்ந்த மரத்தின்*
*வாள்மிசைக்கிடந்த*
*ஆண்மையோன்"* *(புறம்.270:12-13)*

என கழாத்தலையாரும்,

வீரனொருவன் பகைவர் எறியும் வேலானது தன் மன்னன் மீது படாதவாறு தன் மீது ஏற்று, மழையில் நனையாமல் காக்கவல்ல பனை ஓலைக்குடை போல செயல்பட்டமையை,

*"உறைப்புழி ஓலை போல*
*மறைக்குவன்- பெரும!நிற்*
குறித்துவரு வேலே " (புறம்.290:7-8)

என ஔவையாரும் அழகான உவமைகளோடு சிறப்பித்துள்ளனர்.

இவ்வாறாக ஆநிரை மீட்கும் வீரர்கள் போர்க்களத்தில் தம் முன்னே வரக்கூடிய தூசிப்படையைத் தடுத்து நிறுத்துவதோடு, தன் கைவாளால் பகைவரைத் தாக்கி, தானும் போர்க்களத்தில் வீரமரணம் எய்தியுள்ளான்.

**நாடு கவர்வதில் வீரர்கள்**

பகைவர்கள் நாட்டைக் கவர்வதற்குச் செல்லும் வஞ்சி வீரர்கள் மிகுந்த ஆரவாரத்தோடு சென்று பகைவர் ஊர்களைத் தீயிட்டு கொளுத்திய செயலை,

*"இயங்குபடை அரவம் எரிபரந்து எடுத்தல்" (தொல்.புறத்.1009:1)*

என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து போர்க்களத்தில் பகைவர்கள் வெள்ளம் போல பெருக்கெடுத்து வரும் போது அதனைத் தடுத்து நிறுத்தும் கல்லணை போல வஞ்சி வீரன் ஒருவன் படைவெள்ளத்தைத் தடுத்து நிறுத்தியதை,

*"வருவிசைப் புனலைக் கற்சிறை போல*
*ஒருவன் தாங்கிய பெருமை யானும்"*
*(தொல்.புறத்.1009:7-8)*

என்ற நூற்பாவால் உணர முடிகின்றது.

பகை நாட்டைக் கைப்பற்றக் கருதிய மன்னனோடு சேர்ந்த வீரர்கள் பகைநாட்டை எரியூட்டியதை,

*"பகைவர் ஊர்சுடு விளக்கத்து"*
*(புறம்.7:6-7)*
*"ஏம நல்நாடு ஒள்ளெரி ஊட்டி"*
*(புறம்.16:17)*

என்ற பாடலடிகளும்,

பகைவரின் காவல்மரத்தை வெட்டியதை,

"கடிமரம் தடியும் ஓசை" (புறம்.36:9)

என்ற பாடலடியும் விளக்கி நிற்கின்றன.

இவ்வாறு பகைபுலத்தில் மன்னன் ஏவிய பொழுது விரைந்து செயல்பட்ட வீரர்கள், போர்க்களத்தில் எதிர்த்து வரும் பகைப்படையைத் தடுத்து நிறுத்தும் ஆண்மையாளனாக செயல்பட்டமையை,

*"எழுதரு பெரும்படை விலக்கி*
*ஆண்டு நிற்கும் ஆண்தகை யன்னே"*
*(புறம்.292:7-8)*

என விரிச்சியூர் நன்னாகனார் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறாக தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளதைப் போல வஞ்சி வீரர்கள் பகைப்புலத்தைத் தீயிட்டு எரித்ததோடு பகைமன்னனுக்குரிய காவல்மரங்களையும் வெட்டியுள்ளனர். போர்க்களத்தில் தம்மை

எதிர்த்து வந்த பகைவரின் படைகள் மேலும் முன்னேறிச் செல்லாமல் தடுத்து நிறுத்தும் ஆண்மையாளனாகவும் வீரர்கள் செயல்பட்டுள்ளனர்.

**நாட்டைக் காக்கும் வீரர்கள்**

பகைவர் கைப்பற்றிய தம் நாட்டைக் காப்பதற்காக மன்னன் போரிடுவது காஞ்சித்திணையாகும். தொல்காப்பியர் காஞ்சித்திணையை நிலையாமை அடிப்படையில் குறிப்பிட்டுள்ளார். தன் நாட்டைக் காக்கும் போரில் வீரனொருவன் புண்பட்டுக் கிடக்கின்றான். அதனைப் பேய்கள் நெருங்காதவாறு அவன் மனைவிக் காப்பதை,

*“இன்னகை மனைவி பேஎய்ப் புண்ணோன்*
*துன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்”* *(தொல்.புறத்.1025:10-11)*

என தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

இதனைப் புறநானூற்றில் அரிசில்கிழார் பதிவுசெய்துள்ளார். பகைவர் கைப்பற்றிய தன் நாட்டை மீட்பது மன்னன் கடமையாகும். தன் நாட்டைக் காப்பதன் பொருட்டு துன்பம் அடைந்த மன்னனுக்காக வீரனொருவன் வீரக்கழல் பூண்டு போரில் ஈடுபட்டபோது புண்பட்டதை,

*“வேந்துறு விழுமம் தாங்கிய*
*பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை*
*புண்ணே”* *(புறம்.281:8-9)*

என்ற பாடலடிகள் புலப்படுத்துகின்றன. இவ்வாறு போரில் புண்பட்ட வீரனை அவன் மனைவி ஐயவி தூவி, காஞ்சி பாடி, கடிநறைப் பொருளால் காக்கின்றாள். இவ்வீரர்கள் தம் நாட்டைக் காப்பதற்காக மன்னனோடு சேர்ந்து போராடியுள்ளனர்.

**மதில் கைப்பற்றுவதில் வீரர்கள்**

மதில் கைப்பற்றும் போராகிய உழிஞை திணை வீரர்கள் முதலாவதாக மதிலின் மீது ஏறிச் சென்று அதனை முற்றுகையிடுகின்றனர். இந்நிலையில் மதிலைக் கைப்பற்றும் வீரர்கள் தோலாகிய கேடயத்தினைப் பயன்படுத்தியுள்ளனர். அதோடு மட்டுமல்லாமல் திறமை மிக்க வீரன் பகைப்படையின் முன்னே சென்று நெருங்கி போரிடவும் செய்துள்ளதை,

*“தொல்எயிற்கு இவர்தலும் தோலின் பெருக்கமும்”* *(தொல்.புறத்.1013:3)*

*“ஒருதான் மண்டிய குறுமையும் உடன்றோர்”* *(தொல்.புறத்.1013:6)*

என்ற நூற்பா அடிகள் தெளிவுபடுத்துகின்றன.

புறநானூற்றில் உழிஞைத்திணை சார்ந்த பாடல்கள் எதுவும் இடம் பெறவில்லை என்பதால் மதில் கைப்பற்றிய வீரர்களின் செயல்பாட்டினை அறிய முடியவில்லை.

**மதில் காக்கும் வீரர்கள்**

மதிலைக் கைப்பற்றும் படியாக முற்றுகை செய்துள்ள உழிஞை வீரர்களோடு,மதிலைக் காக்கக் கூடிய நொச்சி வீரர்கள் போரிட்டு தோற்றுவிழுவதுண்டு; பின் அகழியில் சென்று போரிடுவதுண்டு;சில சமயங்களில் நொச்சி வீரர்கள் ஊருக்குள் புகுந்து, வீரத்துடன் போரிட்டாலும் தோற்றுப் போவதும் உண்டு.

*“அகத்தோன் வீழ்ந்த நொச்சியும் மற்றதன்*
*புறத்தோன் வீழ்ந்த புதுமை யானும்*
*நீர்ச்செரு வீழ்ந்த பாசியும் அதாஅன்று*
*ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்”* *(தொல்.புறத்.1014:5-8)*

என பல்வேறு நிலைகளில் நொச்சிப்போர் நடைபெறுவதாகத் தொல்காப்பியர் பதிவு செய்துள்ளார். மேற்சொல்லப்பட்ட முறைப்படி மதில் காக்கும் வீரர்கள் நெறி தவறாமல் போரிடுவார்கள் என்று கூற முடியாது.

புறநானூற்றில் மதில் காக்கும் வீரர்கள் காவலை உடைய மதிலில் நின்று பகைவரை எதிர்த்து, தொடர்ந்து மதிலைக் காக்கும் தன்மையினை,

*“காப்புடைப் புரிசை புக்குமாறு அழித்தலின்*
*ஊர்ப்புறங் கொடாஅ நெடுந்தகை”*
*(புறம்.272:6-7)*

என மோசிசாத்தனார் எடுத்துரைத்துள்ளார்.

இவ்வாறாக தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளவாறு, புறநானூற்றில் மதில் காக்கும் போரின் பல்வேறு படிநிலைகளும் சுட்டிக்காட்டப்படவில்லை. ஆனால் வீரர்கள் மதிலில் நின்று புறங்கொடாமல் பகைவரை எதிர்த்து, தொடர்ந்து மதில் காத்தமை மட்டும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**வலிமையைக் காட்டும் வீரர்கள்**

வலிமை காரணமாகச் செய்யப்படும் போர் தும்மைப் போராகும். இப்போரில் ஈடுபடக்கூடிய வீரர்கள் மிகுந்த ஆவேசத்தோடும் ஆக்ரோஷமாகவும் செயல்படுவதுண்டு. இப்போரில் இருநாட்டு வேந்தர்களும் களம் புகுவதுண்டு.

பகைவர்களால் சூழ்ந்து கொள்ளப்பட்ட, வேற்படை மிக்க மன்னனைக் காப்பாற்ற விரும்பிய முன்னனணிப் படையில் இருக்கக் கூடிய வீரன் ஒருவன் மட்டும் தப்பித்து பகைவர்களை வெட்டி வீழ்த்துகின்றான்.

*“வேண்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன்*
*தான் மீண்டு எறிந்த தார்நிலை”*
*(தொல்.புறத்.1018:3-4)*

பகைவர் முன் தோற்று ஓடிவரும் படையில் உள்ள வீரன் ஒருவன், பகைவர் படையில் தனி ஒருவனாகப் புகுந்து பகைவர்களை வெற்றி கொள்வதோடு அடுத்து வரக்கூடிய கூழைப் படையையும்(பின்னணிப்படை)தடுத்து நிறுத்துகின்றான்.

இன்னொரு வீரன் தன் மீது பகைவர்கள் படைக்கலன்களை வீசியதால் புண்பட்ட நிலையில் இருக்கின்றான். இருந்தாலும் அவற்றை அறுத்து எறிந்துவிட்டு, தன் உடல்வலிமையால் மட்டுமே போரிடுகின்றான்.

*“கூழை தாங்கிய எருமையும் படைஅறுத்துப்*
*பாழி கொள்ளும் ஏமத் தானும்”*
*(தொல்.புறத்.1018:7-8)*

என்பதன் மூலம் போர்க்களத்திலே வீரர்கள் துடிப்போடு செயல்பட்டதை அறிய முடிகின்றது.

போரில் தன் மன்னன் இறந்து வீழ்ந்தான் என்றவுடன் கோபங் கொண்ட வீரனொருவன் தனி ஒருவனாகப் போரில் புகுந்து போரிடுவதுண்டு; தன் படைகள் தோற்று ஓடுகின்ற நிலையில் வீரன் ஒருவன் மட்டும் போர்க்களத்திலே தன் வாளைச் சுழற்றி ஆடுவதும் உண்டு. இதனை,

*“செருவகத்து இறைவன் வீழ்ந்தெனச் சினை,*
*ஒருவன் மண்டிய நல்லிசை நிலையும்*
*பல்படை ஒருவற்கு உடைதலின் மற்றவன்*
*ஒள்வாள் வீசய நூழிலும்”*
*(தொல்.புறத்.1018:14-17)*

என்றநூற்பா வீரர்கள் தனிப்பட்ட முறையில் எவ்வளவு வீரமிக்கவர்களாகவும் அஞ்சா நெஞ்சம் உள்ளவர்களாகவும் விளங்கினர் என்பதை எடுத்துரைக்கின்றது.

களிற்றின் மீது ஊர்ந்து வரக் கூடிய வேந்தனைப் பகை வேந்தன் அக்களிற்றோடு சேர்ந்து வெட்டி வீழ்த்தி வெற்றியைக் கொண்டாடுவதும், மன்னர்கள் இருவரும் தத்தம் படைவீரர்களோடு ஒருவரும் எஞ்சாது அனைவரும் இறந்து போவதும் உண்டு.

*“ .... ..... .... ..... களிற்றொடு*
*பட்ட வேந்தனை அட்ட வேந்தன்*
*வாளோர் சூடும் அமலையும் வாள்வாய்த்து*
*இருபெரு வேந்தர் தாமும் சுற்றமும்*
*ஒருவரும் ஒழியாத் தொகை நிலைக்கண்ணும்”* (தொல்.புறத்.1018:9-13)

என்ற நூற்பா வாயிலாக வேந்தர்கள் போர்க்களத்தில் செயல்பட்ட தன்மையை அறிய முடிகின்றது.

வலிமையை நிலைநாட்டுவதற்காகச் செய்யக் கூடிய இப்போரில் வீரர்கள் தங்கள் உயிரையே பணயம் வைத்து கடுமையாகப் போரிட்டுள்ளனர். தம் மன்னனைக் காப்பாற்றுவதிலும், தம் படை அழியாமல் நின்று போரிடுவதிலும் மிக அதிகக் கவனம் செலுத்தியுள்ளனர்.

புறநானூற்றில் வலிமையை நிலைநாட்ட செய்யப்பட்ட போருக்கான சான்றுகள் பல உள்ளன. இப்போரில் ஈடுபட்ட வீரர்கள் மிகவும் துடிப்போடு செயல்பட்டுள்ளனர். போரின் போது பகைப்படைக்கு அஞ்சாமல் அப்படைக்கு நோய் போன்று காணப்பட்டுள்ளனர். தன்னைப் பகைத்துப் பார்த்தாரை அழித்து, முடம்பட்ட எருமை போல பகைவரை அழித்து நடுங்கச் செய்துள்ளனர். பகைப்படைகளின் முன்னேற்றத்திற்குத் தடைக்கற்களாக விளங்கியதோடு கடல் போன்ற தன் படைக்குக் கரை போன்று காணப்பட்டுள்ளனர். இவ்வீரர்கள் தம் படைவீரர்களிடம் தோழமை உணர்வோடு காணப்பட்டுள்ளனர்.

**முடிவுரை**

இவ்வாறாக உயர்ந்த பண்புகளைக் கொண்ட வீரர்கள், போரில் புண்பட்டு வீழ்ந்தபொழுதும், அப்புண்ணினை ஆற்றிக் கொண்டு உயிர் வாழ வேண்டும் என எண்ணாதவராய்ப் போரிலேயே மடிந்து புகழ் எய்தவே விரும்பினர். வீரர்கள் போரின்போது தன் குடும்பத்தைப் பற்றிய எந்த நினைவுகளும் இல்லாமல் முழுமையான பலத்தோடு வலிமை மிக்கவர்களாகவும் சுறுசுறுப்பானவர்களாகவும் வெற்றி ஒன்றையே நோக்கமாகக் கொண்டுச் செயல்பட்டுள்ளனர்.

**பார்வை நூல்கள் :**

1. தொல்காப்பியம் - பொருளதிகாரம், இளம்பூரணர் உரை
2. புறநானூறு கழக உரை